10th March 1959]

Surplus funds of temples

* 679 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) Hindu Religious and Charitable Endowments Administration சம்பந்தப்பட்ட பெரிய ஹிந்து ஆலயங்களின் உபரி வருமானத்திலிருந்து ஹரிஜனச் சேரிகளிலிருக்கும் சிறு கோவில்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் ஹிந்து மத அற நிலையப் பாதுகாப்பு இலாகா சம்பந்தப்பட்ட சட்டத்தை திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிகப் பரமாச்சாரிய ஸ்வாமிகள் அவர்களின் தலைமையின்கீழ் நடை பெற்ற ஹிந்து தர்ம பிரச்சார சங்கத்தின் பொதுக்கூட்ட மொன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசாங்கத்தின் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா ?

(ஆ) அவ்வாறு அனுப்பப்பட்டிருப்பின் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) No, Sir

(ஆ) Does not arise.

Sri P. G. MANICKAM : கடந்த ஜூலை மாதத்தில் மதுரையில் இவ்வாறு ஒரு கூட்டம் நடைபெற்றதாகத் தெரிய வருகிறது. அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகள் அரசாங்கத்திற்கும் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. சர்க்கார் இது விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, ஹரிஜனங்கள் வீடு இல்லாமல் கஷ்டப்படுவதைப்போல் ஹரிஜன தெய்வங்களும் வீடு இல்லாமல் கஷ்டப்படுகிற காரணத்தினால் ஹரிஜன தெய்வங்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு மட்டும் தெரிய வந்தால் போதாது. இந்த அரசாங்கத்திற்கு அது வரவில்லை என்று சொன்னேன்.

Drinking water-supply to Poraiyar

* 680 *Q.*—Sri C. MUTHIAH : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பொறையார் பஞ்சாயத்து தலைவரிடமிருந்து குடி தண்ணீர் வசதியைப் பற்றிய தீர்மானம் வந்ததா ?

(ஆ) அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) A resolution was received from the President of the Tranquebar Panchayat in which the Porayar village is situated.

(*b*) The President, Tranquebar Panchayat, was informed that as the Tranquebar water-supply scheme is not included in the State Second Five-Year Plan, the scheme can be taken up only if the Panchayat is in a position to meet the entire capital, maintenance and investigation charges from its own funds without the aid of a loan or grant from the Government.

Sri C. MUTHIAH : பொறையாறு பஞ்சாயத்து $7\frac{1}{2}$ சதுர மைல் விஸ்தீரணம் இருக்கிறது. பஞ்சாயத்து வருமானம் 48,000 ரூபாய். ஜனத்தொகை 8,000 பேர். இங்குள்ள மக்களின் வசதிக்காக தானாக இயங்கும் தண்ணீர் குழாய்களை வைக்க 75,000 ரூபாய் செலவு செய்தால் போதும்.